




# -: சட்டம் பேசியவள் :-





யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் லண்டன் மாநகரை
வசிப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வரும் பொறியியலாளர்
திரு. ரவீந்திரன் அவர்களின் அன்பு மனைவியும்.

யாழ். மயிலிட்டியூர் பெரியநாட்டுத்தேவன்துறை மிக்கேல்ப்பிள்ளை அன்சன்ஸ்
பங்காளர் திரு. மி. ஞானப்பிரகாசம் பெனடிற்றம்மா தம்பதிகளின் அன்பு மகளும்

லண்டன் மைக்கல் ஹெறன்ஸ் சொலசிற்றேல் சட்ட நிறுவனத்தின் நிறுவனரும்
முதன்மைச் சட்டவாளருமாகிய

## திருமதி
## செல்வி இந்திரா ஞானராணி (பாப்பா) ரவீந்திரன்


அவர்களின் ஓராண்டு நினைவாக

## விரிகிறது

# -: சட்டம் பேசியவள் :-

## 19.03.2010

# சமர்ப்பணம்



**கல்லறையில் தூங்கும்**

**எம் கண் மணியின் நினைவாக**

**வீரியும் ''சட்டம் பேசியவள்''**

**என்னும் இம்மலரை**

**அவரின் திருவடித் தாமரைகளுக்கு**

**காணிக்கை ஆக்குகின்றோம்**



இங்ஙனம்

**கணவன், தாய்,**

**சகோதரர்கள்.**





அன்னை மடியில் 16.11.1964

ஆண்டவன் அடியில் 19.03.2009

# அமரர்

# திருமதி. செல்வி இந்திரா ஞானராணி (பாப்பா) ரவீந்திரன்

(சட்ட நிபுணர்)

# திருமதி. செல்வீந்திரா ஞானராணி

பாப்பா என்ற பாசமிகு நாமத்தை சுமந்து குழந்தை உள்ளம் கொண்ட உன்னை
பல காலப்பழக்கத்தில் தெரிந்து கொண்ட நாள்முதலாய்
உன் பரிவான போக்கினையும் நேயம்மிகு பணிகளையும்
உன்னிப்பாய் உணர்ந்து உன் உறவில் பெருமை கொண்டேன்.

சட்டம் பயின்று சாதனைகள் பல படைக்க பல்கலை கழகம் சென்ற உன்னை
சதி என் விதி பிடித்து சிறையையும் காட்டிடவே
கடவுள் தந்த கருணையினால் கடல்பல கடந்து
அயர்லாந்து தேசத்தின் அறிவையும் பெற்றிட அருகதை ஆகிநின்றாய்

இங்கிலாந்து தேசத்தின் சட்டத்தையும் நீ படித்து
இறுமாப்பும் அடையவில்லை இயல்பினையும் மாற்றவில்லை
மாறாக தேடிவந்தோர் குறைபோக்க மனமது சோராது
மரம் என நிழல்கொடுக்க எடுத்தாய் முயற்ச்சி பல

வாழ்வென்னும் பூங்காவில் அன்பு மலராய் மலந்த உன்னை
படைத்தவனே தன்பதம் வைத்திடவே ஆசைகொண்டு
கொய்துவிட்டான் இடைநடுவில் சேர்த்து விட்டான் தம்மடியில்

உன்பிரிவை கேட்டு அதிர்ச்சி நான் அடைந்தாலும்
ஆறுதல் தரும்தேசமதை அடைந்த உன்னை நான்
கேட்கின்றேன் ஒன்று என்னவெனில்
மறவாதே எங்களையும் மன்னன் மடி நீ உறங்குகையில்

உன் அன்பான அருட்சகோதரி
நீற்றா.

## திருமதி. செல்வி இந்திரா ஞானராணி ரவீந்திரன்

இன்று நீர் இல்லை என்பதை என்னால் நம்ப முடியவில்லை. உமக்காக நீர் இருந்த நாட்களை மீட்டிப் பார்க்கிறேன். மயிலிட்டி நினைவுகள் மலை போல கனக்கிறது. விழிகளில் இப்போதும் ஈரம் சொரிகின்றது.

பாப்பா, உம்மை முதலில் நான் பார்த்தது ஒரு குட்டிச் சிறுமியாய் அழகான சுட்டிப்பிள்ளையாய். அயல் வீட்டில் வாழ்ந்ததால் அக்கா என்று ஒட்டிக் கொள்வாய் 1969ம் ஆண்டு நீ பாடசாலைக்குச் செல்லுமுன் ஆரம்பப் படிப்பை என்னிடமே தொடங்கினாய். ''விளையும் பயிரை முளையில் தெரியும்'' என்ற முதியோர் வாக்கிற்கிணங்க அறிவின் தரத்தில் அற்புதமாய்த் திகழ்ந்தாய்.

எனக்குத் திருமணமாகி நான் திருகோணமலைக்குச் சென்றேன் உம்முடைய நெருக்கம் இடையில் கொஞ்சம் குறைந்தாலும் புகுந்த வீட்டிலிருந்து பிறந்த வீட்டிற்கு வரும்போது என்னைப் பார்க்க ஓடி வருவாய். நீயும் வளர்ந்தாய் உன் அறிவும் நன்றாகவே வளர்ந்தது.


போர் என்ற அரக்கனால் சொத்திழந்தோம் சுகமிழந்தோம் சொந்த உறவையும் தான் இழந்தோம் ஊரும் உறவுகளும் உடுத்த உடுப்புடன் ஊர்வலம் போயினர். நான் திருகோணமலையிலேயே தங்கி விட்டேன் நீரோ சட்டம் படிக்க வெளிநாடு சென்றுவிட்டீர். சட்டத்துறையில் நிபுணத்துவம் பெற்று உயர்ந்த பதவியைப் பெற்றாய்.

உரிய வயதிலே திருமணம் செய்து கொண்ட நீ அன்புக்கணவருடன் வாழ்ந்து வந்தாய். இன்று அவர் தனிமரமாய் தவிக்கிறார். அந்நிய மண்ணிலே உமது தந்தையை இழந்தாய். தம்பிமார் தங்கைமாருக்கு ஆல மரம் போல் தோள் கொடுத்தாய். உறவுகள் நண்பர்கட்கு வழிகாட்டியாய் வாழ்ந்து வந்தாய்.

உமது அம்மாவைக் கூப்பிட்டு ஒரு வருடமாவது உன்னுடன் இருத்த ஆசைப்பட்டாய். என்ன கொடுமை! அம்மா உன்னிடம் வந்த ஒரு திங்களிலேயே காலன் உம்மைப் பறித்துவிட்டான். அந்த அன்புத்தாயின் வேதனையை எழுத்தில் எழுத முடியாது. தம்பிமார். தங்கைமார், உற்றார், உறவினர், நண்பர்கள் நம்ப முடியாமல் ஏங்கினார்கள். பிறந்த நாட்டிற்கும் புகுந்த நாட்டிற்கும் பெருமையைத் தேடித்தந்தாய்.

இறையடி சேர்ந்த உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி. இராசம் பாக்கியசோதி.**



# Memories do not pass a way

It definitely has been a very difficult year for me and my family. We lost our beloved periamma to cancer on March 19. 2009. She was a second mother to me and my little brother and a wonderful sister to my parents she would be greatly missed by each member of our Family.

When I was six years old, my periamma lost her baby. Therefore she treate me as her own son. During our visits, She would wake up early morning before Mama woke up and make me sweet milk. She knew that i Preferred Sweet milk, but mama only gave me plain milk. After wards, She would hare me on her lap and read a book for me.

She was very generous and showered her loved ones with gifts at every pussible occasion. She would phone and ask what I wanted days ahead of my birthday and get my gifts delivered on time. She always made sure i had the perfect birthday present every year. She cared deeply for her Family and Friends.


She always kept me under her wings and mad sure i did will in School. She bought me many books and encouraged me to read them in order to inprove my vo cabulary when she presented me with my very. Own bible she planted a seed in my heart which formed the basis of my religious know ledge and brought me closer to god.

Even though, We lived miles apart, We never felt the distance. We constantly kept in touch through phone calls and visits. I was licky to have had the chance fo be with her during he last Christmas. I Was a very special gift From god death connot dcstroy the giftof loving memories. I am eternally grate ful to lord jesus for blessng our family with such a wonder fullady.

May the road rice to meet you
May the wind be always at your back
May the sun Shine warm upon your fuce
May the rains fall Softly apon your fields
May God hold you in the ho llow of his hand.

``Life is not measured by the number of breaths we take. but by the moments that take our breath a way"

**Loving Nephew,**
**Ushwin Emmanvel**
**Canada.**



# செல்வி அக்கா

செல்வி அக்காவை அவரவர் அழைப்பதை வைத்து செல்வி அக்காவுக்கும் அவர்களுக்குமான தொடர்பை அறிந்து கொள்ளலாம். ''பாப்பா'' என்று அழைப்பார்களாயின் அவர்கள் உறவினர்களாக அல்லது மயிலிட்டியைச் சேர்ந்தவர்களாகவே இருப்பார்கள். ''ஞானா'' என்றழைப்பார்களாயின் அவருடன் கூடப்படித்தவர்களாக இருப்பார்கள். ''செல்வி அக்கா'' என்றழைப்பர்கள் என்றால் அவருடன் கூடி வேலை செய்தவர்கள் அல்லது சட்ட ஆலோசனைக்காக அவரை நாடிச் சென்றவராக இருப்பார்கள்.

எவ்வாறு அழைத்தாலும் நாடி வந்தவருக்கு உதவி செய்யத் தயங்காதவர். அவர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று அயராது உழைப்பவர். அதற்கான சட்ட அறிவும் பெருங்குணமும் உடையவர். யாழ் திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலையில் தனது கல்வியைப் பெற்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டப்படிப்பினைத் தொடர்ந்தார். நாட்டுச் சூழலாலும் அவரின் உதவும் பாங்கினாலும் சிக்கலுக்குள்ளாகி பிறந்த நாட்டைவிட்டு வெளியேறினார். மிகத் திறமையாக மாணவியாகத் திகழ்ந்தும் தனது பட்டப்படிப்பினை முடிக்க வில்லையே என்ற கவலையுடன் வெளியேறினார்.

ஐக்கிய இராச்சியத்திற்கு வந்த பின்னர் தனது சட்டப்படிப்பினை முடித்தார். வழக்கறிஞருக்கான சட்டப்பயிற்சி நெறியை M.K.Sri & Co வில் முடித்து வழக்கறிஞர் ஆனார். அங்கே பணியாற்றும் போதே எனக்கும் பழக்கமானார். இலகுவில் அணுகக்கூடியவர் ஆண், பெண் வேறுபாடின்றி சகஜமாகப் பழகுவார். வாழ்க்கை அவருக்கு சோதனைகளையும்

வேதனைகளையும் கொடுத்தபோதும் அதனால் மனம் சோராமல் தன்னை நாடி வந்தவர்களுக்கெல்லாம் அவரவர் சிக்கலில் இருந்து மீள வழி சொன்னவர். எல்லோருக்கும் அன்பையும் ஆதரவையுமே கொடுத்தவர். செய்யும் தொழிலே தெய்வம் என்று வாழ்ந்தவர் கொண்டாட்டங்கள் என்றால் அது கூடிக்ழிப்பதற்கே என்ற கெள்கையுடையவர். நன்றாகப் பாடுவார்.

M.K.Sri & Co மூடப்பட்டபின் K - RAVI SOLICITORS இல் இரண்டு File களுடன் தான் தன் வேலையை ஆரம்பித்தார். நல்ல பொருளுக்கு விளம்பரம் தேவையில்லை. அவர் சேவையறிந்து பலர் தேடிவந்தார்கள். ஓர் நாள் என்னிடம் சொன்னார் தம்பி நான் சாகப்போகின்றேன் என்று நான் தத்துவ வாதியாக மாறி எல்லோரும் ஓர் நாள் சாகத்தான் போகிறோம் என்றேன். ஆனால் தனக்கு சாகும் நாள் தெரியுமென்றார். சாகும் நாள் தெரிந்தால் வாழும் நாள் கொடிது என்பார்கள். அதையும் அடுத்தவருக்காகவே வாழ்ந்து சென்றார்.

புற்றுநோய் வந்து முதற்கட்டத்தில் அதை அகற்றியதாக மருத்துவர்கள் கூறினார்கள். மீண்டும் வேலை செய்யத்தொடங்கினார். அவரின் பலநாள் இலட்சியமான ஒரு சட்ட நிறுவனம் ஆரம்பிப்பதற்கான கனவை நனவாக்கினார்.


மைக்கல் ரெறன்ஸ் சொலசிற்றேல் சட்ட நிறுவனத்தை வெற்றிகரமாக தன் இறுதிமூச்சுவரை நடாத்திக் காட்டினார். பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்று பலர் வாழும் உலகில் வாழ்ந்து சாதித்துக் காட்டினார். பலரது மனங்களில் தனக்கென்று ஒரு இடத்தைத் தக்க வைத்தவர்.


அவரது இறுதிக் கிரியையின் போது வேலை நாள் பலர் வந்திருந்தார்கள். சாவு வீட்டில் வீண்கதைகள் பேசிக் கதைப்பதை நாம் கண்டிருக்கிறோம். ஆனால் இவரது இறுதிச் சடங்கில் பலர் தனியாக விசும்பிக் கொண்டிருந்தார்கள். பொதுவாக ஆண்கள் அழுவது குறைவு. இங்கு பலர் அழுது கொண்டிருந்தார்கள். ஆறுதல்தேடி, ஆலோசனை தேடி, ஓடிவர செல்வி அக்கா இல்லையே என்ற கவலையில் அவர்கள் அழுதிருக்க வேண்டும்.

என் தந்தையைக் கொன்ற புற்று நோய்
என் தமக்கையையும் கொன்று விட்டது
இறந்தும் எங்கள் எல்லோர் மனதிலும்
இருக்கும் செல்வி அக்காவை நாங்கள்
மறக்க நினைத்தாலும் மறக்க முடியாது.

கருணா

**(K. Ravi Solititors)**





சட்டக்கல்லூரிச் சான்றிதழ் விருதுடன்

# எமக்குள் என்றும் இருப்பாய்

காணிக்கை அன்னைதந்த கற்பகமே
ஏனிந்த சோகமதை எமக்களித்தாய்
மயிலை நகர்பிறந்து வளர்ந்தெழுந்து
மாநகர் கன்னியர் மடத்தில் கல்விகற்று
சட்டக் கல்லூரிசென்று தகைமையுடன்
சட்டநிகர் மேதையென உயர்ந்துநின்றாய்

மாணவியாய் லண்டன்நகர் சென்று பின்பு
மணவினையி லிணைந்தரிய கணவனுடன்
இலங்கை மடுத்திருப்பதியில் கண்டெமது
இல்லமதற் கேகிநின்றாய் இன்பமுடன்
மல்லாவி எமதில்லம் வந்த உம்மை
மணமக்கட் கோலமதில் கண்டிடவே
வாசமலர் மாலையிட்டு வரவேற்று
வாழ்த்துரைகள் பாடியுமை அன்பபி வைத்தோம்.

காத்திரமாய் கல்விகற்ற காரியையே ~ உன்
பெயரதனைச் சொல்லஒரு பிள்ளையில்லை
கற்பகமே உன்பிரிவை கேட்டவுடன்
கண்ணிருந்து நீர்வழியநாம் கலங்கினோம்

சட்ட நிறுவனத்தின் நாயகியே
உன் சந்ததியும் கண்ணீரில் கலங்குதம்மா
பிரியமுள்ள சோதரியே பாப்பா நீ
பிள்ளையார் குடும்பத்தில் என்றுமிருப்பாய்.

உன் பிரிவை நினைந்துருகி ஆத்ம சாந்தி வேண்டி நிற்கும்.

**மயிலை செ. சண்முகநாதன்**

**(பிள்ளையார் குடும்பம்)**

# I Miss You!

Paappa is her pet name
Selvi Indra Gnarani
is her baptismal name
Higher Studies brought het
To Lourdes hostel Jaffna.

Broad Smile on her Face
Readiness to help all
Gentleness in Speech
Enthu siastic in Studies
Thought Fulness of others
Keeping to rules and regulations
Of the hostel
Attracted the sisters
At Lourdes Convent.

Two years with us
From 1985 - 1986
Paappa with us lived
Memory do not fail
Of Pappa whom we loved much
Never I Dramed
Untimely death will take her life
A way from us early in life.

I Miss her a lot
For I loved her much
A cousin of mine she
Fond menories last.

Why I wonder
This beautifal flower
Was picked by the lord
Leaving her loved ones
Sad and weep silently.

There is a purpose
under heaven
For everything
I do believe
God's will is the best
For exery one
To accept this sorrow
And trust in His mercy.

May She Find peace
In the heavenly father's care
Sharing in your loss
In deepest sympethy
And prayar.

Loving Sister
Rosemalar A.C
Puttalam,
Sri Lanka.

# திருமதி. ஞானராணி ரவீந்திரன் அவர்களின்
# நீங்காத நினைவுகள்

அன்று 1975 ஜனவரி ஒன்று, ஞாயிறு பிற்பகல் முன்பனிக் கால வாடைக்காற்றின் மாலை நேர நெருடல் ஆரம்பமாகும் வேளை!, யாழ் திருக்குடும்பக் கன்னியர் மட ஆங்கில விடுதியில் சேர்வதற்காக எனது பெற்றோருடன் சென்றிருந்தேன். அங்கு எமது பொருட்கள் மீது எமது பெயரை எழுதும்படி விடுதிப் பொறுப்பாளர் கூறினார். தடித்த எழுத்தில் எழுதும் பேனா அந்த நேரம் எம்மிடம் இல்லை. வெளியே வாங்குவதற்குச் செல்லும் போது பக்கத்தில் நின்ற ஒருவர் தனது பேனாவைப் பாவிக்கலாம். என்று தந்தார். அவர்தான் ஞானராணியின் தந்தையார் என்று பின்பு விளங்கிக் கொண்டேன்.

அவர்களுக்குப் பக்கத்தில் என்னளவு ஒரு சிறுமி வட்டமான முகம், ஒளிவீசும் கண்கள், பாச உணர்வு சொரியும் பார்வையுடன் நின்றாள். அது என் ஆருயிர்த் தோழியை முதன் முதலில் கண்ட நிகழ்வு!.

விடுதிக்குள் சென்று படிப்படியாக விடுதி வாழ்க்கை ஆரம்பமாகும் போது இவரின் பெயர் மற்றும் இவரது குடும்ப விபரங்களையும் அறிந்து நல்ல நட்போடு பழகிக் குடும்ப நண்பர்களானோம்.

கல்வியில் சிறந்து விளங்கிய ஞானராணி சக மாணவர்களுக்கு எடுத்துக் காட்டாகவும் முன்னுதாரணமாகவும் விளங்கினார். பேச்சு வன்மையில் ஈடு இணை அற்றவராக விளங்கினார். இவரது பேச்சுக்கலை பொருள் பொதிந்த உணர்ச்சி

ததும்பும் வசனநடை, கேட்போரை அதிர வைக்கும் குரல் இவையெல்லாம் இவரின் எதிர்காலச் சட்டத் தொழிலுக்குக் கட்டியம் கூறின.

1984ல் உயர்கல்வி நிறைவுபெற ஞானராணி சட்டக்கல்விக்காகக் கொழும்பு சென்று ``Barnada Hostal'' இல் இருந்து சட்டக்கல்லூரியில் கல்வி கற்றார். பின் லண்டன் சென்று கல்வியைத் தொடர்ந்து படித்து வக்கீல் தொழில் புரிந்தார். பத்து வயதில் ஆரம்பமாகி லண்டன் வரை தொடர்ந்த இந்த நட்பு பெரியது என்பதால் என்னால் ஞானராணியின் இழப்பு தாங்க முடியாதுள்ளது.

இதைப்போன்றே எனது சகோதரர்களான விஜிக்கும், அலனுக்கும் பெருந்துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. எனது குடும்பமே ஞானராணியை இழந்து தவிக்கிறோம். ஞானராணியால் ஏற்பட்ட எமது குடும்ப நட்பு தொடர்ந்து கொண்டே இருக்கும். இவரின் நற் பண்புகள் எமக்கு வழிகாட்டும்.

``சுமை சுமந்து சோர்ந்து நிற்பவரே என்னிடம் வாருங்கள் நான் உங்களை இளைப்பாற்றுவேன்'' என்று கூறிய எல்லாம் வல்ல இறைவன் கொடுமையான நோயின் சுமைகளைத் தாங்கிய ஞானராணிக்கு நல்ல இளைப்பாறுதலைக் கொடுத்து இளைப்பாற்றுவாராக. இவரின் மறைவால் ஆறாத்துயரில் இருக்கும் இவரின் குடும்பத்தினருக்காகவும் ஜெபிப்போமாக.

Geetha Joseph
U.K.

# முல்லை அன்ரியின் எண்ண அலையின்
# நீங்காத நினைவுகள்

பேதுருப்பிள்ளை குடும்பத்துக்கு நீமூத்த பேரப்பிள்ளை
நான் முதல் தூக்கிய முத்தும் நீதானம்மா
உனக்கு இட்ட பெயர் நீளம் என்று - உனை
செல்லமாக நாங்கள் பாப்பா என்றோம்
பார்த்தவர் எல்லோருக்கும் நீபாப்பா ஆனாயம்மா
பிள்ளையார் அப்பு தன் கைவண்ணம் காட்டி செய்த
சிங்காரத் தொட்டிலில் உன்னைச்சீராட்டி வைத்தாரம்மா
அழகான உன் நடை பார்த்து ஆனந்தம் அடைந்தோம்
அதுவும் ஆண்டவனுக்குப் பொறுக்காமல்
உன் கால் உடைந்த தம்மா
காலுக்குப் பத்துப் போட்டு கட்டிலில் படுத்த போதும்
உன் கலகல என்ற பேச்சால் எமை சிரிக்க வைத்தாய்
தடைகள் பலதாண்டி உன் படிப்பைத் தொடர்ந்தாய்
பட்டப் படிப்பு படிக்க தலைநகர் வந்தாய்
தோழியருடன் சேர்ந்து செய்தவற்றை சொல்லிச் சிரித்த சிரிப்பு
என் சிந்தையில் இன்னும் இனிக்குதம்மா
ஒன்றா இரண்டா ஓராயிரம் கதை நீ என்னிடம் செப்பியது
அத்தனையும் என் நெஞ்சில் சிக்கி நிற்குதம்மா
ஏட்டில் எழுத நான் ஓர் எழுத்தாளன் இல்லையம்மா
செல்வராணி பெற்ற மகள் இலண்டனில் கொடி கட்டிப்
பறக்கிறாள் என்று பலர் சொல்லக் கேட்டு
பரவசம் அடைந்தோமம்மா.
கட்டவிழ்ந்து கொடி காற்றில் பறக்கும் என்று
கனவிலும் நினைக்கவில்லையம்மா


கொஞ்சி விளையாட ஒரு குஞ்சுதான் இல்லை
என்று நீ கெஞ்சி வரம் கேட்டாயம்மா
பாதிவயதில் இந்தப் பாரை விட்டுப் போவாயென்றோ
பரமன் உனக்குத் தந்த பாலனையும் பறித்தானம்மா
உன் பிள்ளையுடன் உன்னை சேர்க்க என்றோ
பொல்லாத நோய் உனக்கு சொல்லாமல் வந்தது
ஓடி வந்து உனைப்பார்க்க உடன் எனக்கு
விசா கிடைக்கவில்லை ஓடித்திரிந்து விசா எடுத்து
நான் உன்னிடம் வந்தேன் நான் வருமுன்
காலன் உன்னுயிரைக் கவர்ந்து விட்டான்
சட்டங்கள் படித்த சட்டவாளர் நீ
சட்டத்தின்முன் நிறுத்த வேண்டிய பலவற்றை
உன் சட்டைப்பையினுள் மறைத்து மன்னித்தாயம்மா
உன்னைப்போல் மன்னிக்கும் மனப்பக்குவத்தை இவ்வுலகில்
இறைவன் எமக்கு தந்திடவரம் வேண்டுகிறோம்
நீ ஓடி மறைந்து ஓராண்டு ஆனதம்மா
ஓராண்டு ஆனாவென்ன ஓராயிரம் ஆண்டு ஆனாலென்ன
ஓயாது உன் நினைவலைகள் எம் நெஞ்சங்களில்
காணிக்கை அன்னை உன்னை தன் கரங்களில் ஏந்தி நிற்பார்
இனிதே நீ அங்கு இன்பமுடன் வீற்றிருக்க
நான் இங்கிருந்து வேண்டுகிறேன்.

உன் காலடியில்
அன்ரியின் கண்ணீர்ப் பூக்களைக்
காணிக்கையாக்குகின்றேன்.

# அன்பு நாயகனின் இரங்கல்


அன்புடைய மாதரசே
அருந்துணையே பாப்பா
கைப்பிடித்த நாள் முதலாய்
கணமுமே நாம் பிரியாமல்
இத்தரணி மீதில் என்றும்
இன்பமுடன் வாழ்ந்திருந்தோம்
கற்கையிலே உயர்ந்த கற்பகமே
காரிருளில் விளக்காகக் காத்தவளே
கண்ணிமைப் பொழுதிற்கு ளெனைப்பிரிந்து
கனதூரம் சென்றதேனோ
சிந்தனையும் சிதைந்திங்கே
தேற்றுவார் யாருமின்றி
வெந்து மனம் வாடி
வேதனையில் விம்மி நின்று
நோயின் சுமை சுமந்த உந்தனுக்கு
நல்ல இளைப்பாற்றுகையைத் தந்திடவே
ஆண்டவனை என்றென்றும்
வேண்டித் துதிக்கின்றேன்.




மலர் முதல் பக்குவம் வரை

# தாயாரின் இரங்கல்

கண்ணே கருமணியே
காணிக்கை மாதா தந்த கருணைத்திருவே
எங்கே நீ எங்கே
ஏங்கித் தவிக்கிறேன் நான் இங்கே
பெரிய மகளே பாப்பா
எமைப் பிரிந்தெங்கே சென்றாய்
ஆண்டொன்று ஆனதம்மா
ஆவி தனை நீ துறந்து
கன்றை இழந்த கார் ஆவின் நிலைபோல
தீராததுயரத்தில் தேம்புகிறேன் நான்
ஓயாது உழைத்தவளே
உயிர் பெற்று வாராயோ
சட்ட நிறுவனத்தில் மீண்டொருக்கால் பேசாயோ
சந்ததியின் மூத்தவளே நீ
ஒரு சந்ததியைத் தரவில்லையம்மா
சட்டென வந்த நோய்
உனை சாகடித்துச் சென்றதுவோ
என் கண்ணீரால் உன்
கல்லறையைக் கழுவுகின்றேன்
நித்திய வாழ்வு பெற
நிதமும் வேண்டுகின்றேன்.



# சகோதரர்கள் இரங்கல்

அன்பு நிறைந்த உன்பேச்சால்
அனைவரையும் அரவணைத்தாய்
பாசமூட்டி இன்பக்கடலாட வைத்தாய்
உன்னவற்கு உற்ற வழிகாட்டியானாய்
மடிசுமந்து மார்பு தந்து முத்தமிட்டு
உன்னைப் பெற்றெடுத்த அன்னை
நொந்து மனம் வாடுகின்றார்
அவரை தேற்றிடவே முடியவில்லை
உடன் பிறப்புக்கள் நாம்
உனையிழந்து தவிக்கின்றோம்
உனைக் கைப்பிடித்த நாயகனோ
இன்று கண்கலங்கி வாடுகின்றார்
உன்பாசத்தை நீ மீளாத்துயில் கொள்கையில்
சுற்றி வந்த உறவுகழ் சொன்னார்கள்
உதவிகள் பல செய்த உனக்கு
இறைவன் கூட இரங்கவில்லையே

ஊன் உறக்கமின்றி உழைத்த உத்தமியே
என்ன தவம் செய்தோம் உன்னுடன் பிறப்பதற்கு
மற்றத்து நிலவாய் நீயிருந்தாய் – உனைச்சுற்றி
விடிவெள்ளிகளாய் நாம் இருந்தோம்
உயிர்க்கடையில் எம்முடன் கூடிப்பிறந்த
அபூர்வப் பிறவியே – இங்கு
எமை ஏங்கித் தவிக்கவிட்டு
பப்பாவிடம் விரைந்த மாயம் என்ன ?
சட்டத்தரணி தகைமை பெற்ற வித்தகியே

இனிய மயிலைமண்ணில் நீ வெற்றிக் களிப்பில்
வீறுநடை போட்ட இளமைக் காலங்களையும்
ஏணிப்படியாய் உன் உயர்வையும் கண்டு
ஆற்றல் மிக்க உன் அறிவுரைகளையும் மெச்சி
இறுதிவரை எம்முடன் இருப்பாயென இருந்தோம்
சொல்லாமல் ஏனிப்படி விரைந்து விட்டாய்
நீர் சொல்லிச் சென்றிருந்தால்
விடமாட்டோம் என்பதாலோ

திரும்பும் திசையெலாம் உன் சிரித்த முகம்
விம்பமாய் தோற்றுதம்மா
நெஞ்சுக்குள் கனக்கிறது உன்நினைவுகள்
எம் இதயத்தில் நிறைந்திருக்கும் – உன்
இறவாத நினைவுகள் கண்ணீருடன்
எம்மனக்கண்ணில் வந்து போகின்றன
உந்தனுக்கு கைமாறு செய்வதற்கு
எம்மால் என்றும் முடியாதம்மா.

வானுலகில் பப்பா உமை வரவேற்க
விரைந்து வந்து வாசலில் காத்துநிற்பார்
நெஞ்சு வெடிக்கிறது உமை நாம்
வழியனுப்பி வைத்ததை எண்ணும்போது
விண்ணுலகில் இருந்து நீ
எமை என்றும் பார்த்துக் கொள்டிருப்பாய்
நகரும் நாட்களோ மாறும் காலங்களோ
உன் நினைவுகளை எம்மிடமிருந்து
பிரித்து விட முடியாதக்கா.

# நடந்து வந்த பாதை

- மயிலிட்டி பெரியநாட்டுத் தேவன்துறை மிக்கேல்பிள்ளை அன்சன்ஸ் பங்காளர் திரு. மிக்கேல்பிள்ளை ஞானப்பிரகாசம் (துரை) அவர்கட்கும் அதே ஊரைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் திரு. திருமதி. பேதுருப்பிள்ளை தம்பதிகளின் புதல்வி பெளடிற்றம்மா (செல்வராணி) அவர்கட்கும் 16.11.1964 அன்று சிரேஷ்ட புத்திரியாக செல்வீந்திரா ஞானராணி தோற்றினார்.

- இவரது உடன் பிறப்புக்களாக அன்ரன் ஞானராச் ஜோர்ஜ் பிறேம்ராச். சுஜேத்திரா, கல்பனா ஆகியோர் விளங்குகின்றார்கள்.

- 1970ல் தனது பாடசாலை வாழ்க்கையை மயிலிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பித்து 1974 வரை தனது ஆரம்பக் கல்வியைக் கற்றுத் தேறினார்.

- 1975 தொடக்கம் 1983 வரை தனது இடைநிலைக்கல்வி, உயர்தரம் என்பவற்றை யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் தொடர்ந்தார்.

- ஆங்கில மொழி மூலக்கற்றல் இவரது ஆங்கில அறிவை விருத்தி செய்தது. கல்லூரியில் நடைபெறும் ஒளிவிழா உட்பட சகலகலை நிகழ்வுகளிலும் பங்கு பற்றி தனது பேச்சாற்றல் நடிப்புத்திறன் வாசிப்புத்திறன் என்பவற்றை வெளிப்படுத்தி பல பெரியார்களின் பாராட்டுக்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டார்.

- கல்லூரியின் மாணவர் விடுதியில் தங்கியிருந்து கற்றமையினால் சக மாணவர்களோடு இனிமையாகப் பழகுதல், ஆசிரியர்கள்

அருட்சகோதரிகளை கனம் பண்ணுதல், பெரியோர்களை மதித்தல் நட்புக்களிற்கு முன்னுரிமை கொடுத்தல் போன்ற பண்புகள் இவரிடத்தில் மேலோங்கிக் காணப்பட்டன.

☛க ம்பீரமான குரல்வளமும் பேச்சுத்திறனும் இவரை நாடக நடிகராகவும் உயர்த்தி வைத்தது. 1978ம் அண்டு கன்னியர் மடத்தில் நடைபெற்ற தமிழ்த்தின விழாவில் ''பாஞ்சாலி சபதம்'' என்ற நாடகத்தில் துரியோதனன் பாத்திரத்தை ஏற்று மிகவும் காத்திரமான நடிப்பினை வெளிப்படுத்தினார்.

☛1980ல் க.பொ.த. சாதாரணதரத்தில் சிறந்த பெறுவேறுகளைப் பெற்று க.பொ.த. உயர்தரத்தில் கல்வி கற்றார்.

☛போதிய நுண்ணறிவும் கிரகிக்கும் ஆற்றலும் கொண்ட பாப்பா பலவிதமான சமூகங்களுடனும் பழகும் சந்தர்ப்பங்களைப் பெற்றிருந்தார். சாதிமத பேதமின்றி எல்லோருடனும் சகஜமாகப் பழகி அவர்களின் கலாச்சாரங்கள், சடங்கு முறைகள் பழக்க வழங்கங்கள் வழிபாட்டு முறைகள் என்பவற்றை தானும் அறிந்து பின்பற்றுவார்.

☛1 986ல் க.பொ.த. உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கொழும்புப் பல்கலைக்கழக சட்டபீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்.

☛ப ங்குத் தெய்வமாக மயிலிட்டி காணிக்கை மாதாவை வழிபடும் பேறு பெற்றவர். அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகளை நடமாடும் தெய்வமாக மதித்தவர்.

- 1987ல் நாட்டில் ஏற்பட்ட இந்திய இராணுவ நடவடிக்கைகள், மற்றும் பாதுகாப்பற்ற தன்மைகளால் மிகுந்த சிரமத்தின் மத்தியில் தனது முதல் பட்டத்தினை நிறைவு செய்து இரண்டாவது பட்டத்தினை ஐரோப்பிய நாடொன்றில் பெறும் உறுதியுடன் 1991ம் ஆண்டு ஐரோப்பிய நாடு நோக்கிப் புறப்பட்டார்.

- 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் ஜோன் செபஸ்தியாம்பிள்ளை பிரான்சிஸ்கா (ஓய்வுபெற்ற ஆசிரியை) தம்பதிகளின் புதல்வன் பொறியியலாளர் ரவீந்திரனை நாட்டினர் போற்ற நற்சுப தினத்திலே வாழ்வின் துணையாக மணம் புரிந்து கொண்டார்.

- மகிழச்சிகரமான குடும்ப வாழ்க்கையின் பயனாக சுவீடன், கனடா, நோர்வே, இந்தியா போன்ற பல நாடுகளுக்கு சுற்றுலாக்களை மேற்கொண்டனர். சகோதர சகோதரிகள் உறவினர்கள் நண்பர்கள் வாழும் நாடுகளிற்கு சென்று மகிழ்வுடன் வாழ்ந்து வந்தார்கள்.

- எல்லா வளங்களையும் அள்ளிக் கொடுத்த ஆண்டவன் இவர்களின் வாழ்வில் புத்திர பாக்கியத்தைக் கொடுக்க வில்லை. இவ்வேதனையால் அல்லும் பகலும் ஆண்டவனை மன்றாடினார்கள். பிரார்த்தனை வழிபாடுகள் செய்தார்கள் நேத்திகள் வைத்தார்கள் பல வைத்திய ஆலோசனைகள் பெற்றார்கள் இவைகளின் பயனால் இறைவன் குழந்தைப்பேற்றைக் கொடுத்தான். ஆனால் அது குறையுள்ள வரமாக அமைந்தது. குழுந்தை இறந்தே பிறந்தது.

- சகோதரன் அன்ரன் ஞானராச் ரூபினி என்னும் பெண்ணை மணந்து பிறின்சி என்னும் மகளுடன் சுவிசில் வாழ்ந்து வருகின்றார். அடுத்த சோதரன் ஜோர்ஜ் பிறேம்ராச் செல்வராணி


திருமண மேடையில்

என்னும் பெண்ணைத் துணைவியாக்கி லத்திக்கா ஆதேஸ் என்னும் பிள்ளைகளுடன் சுவிஸ் நாட்டில் வசித்து வருகின்றார்கள்.
கடனாவில் வசிக்கும் தங்கை சுஜேத்திரா கிறேசியன் தம்பதிகள் அஸ்வின், கொட்வின் என்னும் இரு குழந்தைகளுக்கு பெற்றோராகினர்.
இளைய தங்கை கல்பனா எட்வேட் சசிகரனை வாழ்க்கைத் துணையாக்கி பென்சன், நேந்தன் என்னும் இரு மகனுடன் கனடாவில் வாழ்கின்றார்கள்.

☛கணவன ின் சோதரர்களான மயூரிக் விஜேந்திரன், விலானி கிறிஸ்ரி, லலிஸ்ற் சத்தியேந்திரன், சர்மினி ஜீவநாயகம் என்போரை அன்பாக மதித்து வாழ்ந்தவர்.

☛வீடு, கல்வி, பணம், தொழில், புகழ், சுற்றம் என எல்லா வளங்களையும் கொடுத்த இறைவன் அவர்கள் பெயர் சொல்ல சந்ததியைக் கொடுக்காது பாப்பாவை சாகடித்து விட்டான்.

☛1999.11.17 அன்று இந்தியாவில் வசித்து வந்த தந்தையார் திரு. ஞானப்பிரகாசம் அவர்கள் யாத்திரை போகையில் கோவா மண்ணில் அழியாவரம் பெற்ற புனித சவேரியாரின் திருத்தலத்தில் திடீரென உயிரிழந்த துயரம் பாப்பாவை பெரிதும் வருந்தியது. தந்தையின் இழப்பால் தனது பட்டமளிப்பு விழாவினை ஆடம்பரமாக கொண்டாட மறுத்து விட்டார்.

☛2003ல் நாட்டில் ஏற்பட்ட சமாதானத்தின் போது கணவருடன் இலங்கை வந்து பலபாகங்களிற்கு சென்று தனது அன்பிற்குரியவர்களை தேடிச் சென்று அவர்களின் அன்பை பெற்று பல உதவிகள் செய்து தான் கல்வி கற்ற பாடசாலைகள்,

கல்வி புகட்டிய ஆசிரியர்கள் என எல்லோரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

- பதின்மூன்று வருடங்களின் பின்னர் மாணவியாக நாம் மயிலிட்டியில் பயணம் அனுப்பி வைத்த பாப்பா சட்டவாளராக, குடும்பப்பெண்ணாக தனது கணவருடன் 2003ல் மடுமாதா தேவாலயத்தில் எம்மை சந்தித்தவேளை நட்பின் இலக்கணம் மீண்டும் ஒருமுறை புதுப்பிக்கப்பட்டது. இப்படியொரு நட்பா கணவர் ரவீந்திரன் கூட ஒரு கணம் திகைத்து நின்றார்.

- மல்லாவியில் உள்ள எமது இல்லம் மீண்டும் அவர்களை புதுமணத்தம்பதிகளாக றோஜா மலர்மாலை அணிவித்து வரவேற்றது.

- இரண்டு வருடங்கள் கழித்து மீண்டும் வருவேன் என்ற நம்பிக்கையுடன் பாப்பாவும் வழிஅனுப்பி வைத்த அன்புள்ளங்களும் விடை கொடுத்தார்கள். யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலயத்தில் இருந்து பலாலி விமான நிலையத்திற்கு கையசைத்து விடை பெற்றுச் சென்ற சீமாட்டி அதுதான் தனது கடைசிப்பயணம் என்று நினைக்கவில்லை. நாங்களும் நினைக்கவில்லை. ஆண்டவன் மட்டும் நினைத்திருந்ததினால் யாரறிவார் அவன் செயலை.



மயிலை. செ. சண்முகநாதன்
(சிற்பாசாரி)

# காணிக்கைப் பாடல்

நிலையில்லா எம் வாழ்விலே
நிலைப்பதே உம் அருள் ஒன்றே
அளவில்லா உம் கருணையால்
அனைத்தும் பலியாய் அளிக்கின்றோம்

அமைதியான உலகம் தேடி
அலைந்து நாளும் வேண்டினோம் - 2
அன்பு பொழியும் இறைவனென்று - 2
அருளின் தாளைப் பணிகின்றோம் - 2

உழைப்பதெங்கள் கரமென்றாலும்
உறுதி உம்மால் வேண்டுமே - 2
பிழைக்கும் எண்ணம் இனிது வளர - 2
உமது தூய்மை வேண்டுமே. - 2

# அஞ்சாதே

அஞ்சாதே அஞ்சாதே
நான் என்றும் உன்னோடு
என்ன துன்பம் வந்தாலும்
என் அன்பு உன்னோடு.

1. குன்று அசையலாம் குகைகள் பெயரலாம்
உலகம் முழுவதும் உன்னை
வெறுக்கலாம்
என்னென்ன நிலைதான் ஆனாலும்
எந்தன் அன்பு மாறாது
அஞ்சாதே அஞ்சாதே
உன்னை நானே காப்பேன்.

2. அன்னை குழந்தையை அணைக்க
மறப்பாளோ
சின்ன துன்பமும் நெருங்க விடுவாளோ

அன்னை என்னை மறந்தாலும்
உன்னை நானே மறவேனே
அஞ்சாதே அஞ்சாதே
உன்னை நான் காப்பேன்.

## முடிவில்லா வாழ்வை

முடிவில்லா வாழ்வைத் தேடி
வருகின்றேன் - இறைவா
உன் முன்னிலையில் மண்டியிட்டுக்
கிடக்கின்றேன் - யேசையா
முடிவில்லாத வாழ்வைத் தேடி
வருகின்றேன்.

1. நானே உயிர் தரும் ஊற்று - என்ற
வார்த்தையின் பொருள் என்னவோ?
உன் ஊற்றில் பருகும் எனக்கென்றும்
இறப்பில்லையே?
இருளில்லையோ?
தாகமில்லையோ?

2. நானே உயிர் தரும் உணவு - என்ற
வார்த்தையின் பொருள் என்னவோ?
உன் உடலை உண்ணும்
எனக்கென்றும்
பசியில்லையோ?
துயரில்லையோ?
துன்பமில்லையோ?

## பாடல்கள்

சுமை சுமந்து சோர்ந்திருப்போரே
சுமை சுமந்து சோர்ந்திருப்போரே
என்னிடம் எல்லோரும் வாருங்கள்.

1. உங்களை நான் நடத்திச் செல்வேன்
உங்களை நான் அன்பு செய்வேன்
உங்களை நான் அரவணைப்பேன்

உங்களை நான் வாழச் செய்வேன்.

2. உங்களை நான் வளரச் செய்வேன்
உங்களை நான் ஒளிரச் செய்வேன்
உங்களை நான் மலரச் செய்வேன்
உங்களை நான் மிளிரச் செய்வேன்

## யாரிடம் செல்வோம்

### பல்லவி

யாரிடம் செல்வோம் இறைவா
வாழ்வு தரும் வார்த்தையெல்லாம்
உம்மிடமன்றோ உள்ளன
இறைவா..... இறைவா.....

### சரணம்

1. அலைமோதும் உலகினிலே
ஆறுதல் நீ தரவேண்டும்(2)
அண்டிவந்தோம் அடைக்கலம் நீ
ஆதரித்தே அரவணைப்பாய் (2)

2. மனந்தனிலே போராட்டம்
மனிதனையே வாட்டுதையா
குணமதிலே மாறாட்டம்
குவலயம்தான் இணைவதெப்போ (2)

3. வேரறுந்த மரங்களிலே
விளைந்திருக்கும் மலர்களைப்போல் (2)
உலகிருக்கும் நிலைகண்டும்
உனது மனம் இரங்காதோ (2)

## இறந்தவர் இல்லத்தில் பாடக்கூடியவை

### பல்லவி

ஆண்டவா என்தாயன். எனக்கு.
வேண்டியாதொன்றும் இல்லை

சரணம்

1. ஆண்டவர் எனது ஆயன் - எனக்கு
வேண்டிய தொன்றும் இல்லை
பசும்புல் மேய்ச்சல் நிலத்தில் - என்னைப்
படுக்கச் செய்கின்றாரே.

2. தேற்றும் நீரருகே எனையழைத்து
புத்துயிர் ஊட்டுகின்றாரே
தம்பெயர் பொருட்டெனை நேரிய வழியில்
நடத்திச் செல்கின்றாரே

3. காரிருட் கணவாயில் நான் நடந்தும்
தீமையெதற்கும் அஞ்சேன் ஏனெனில்
நீரென்னோடிருக்கையில் உம்
தண்டும் கோலும் தேற்றும்

4. எனது பகைவர் பார்த்திட எனக்கே
விருந்தொன்றமைக்கின்றீரே
என்தலைக் கெண்ணெய் பூசுகின்றீர் என்
கிண்ணம் நிரம்பி வழிகின்றதே

5. அன்பும் தயவுமென் வாழ்நாளெல்லாம்
எனைத் தொடருமன்றோ
அண்டவர் தம் இல்லந்தனிலே நான்
நீடுழி குடியிருப்பேனே

6. தந்தை மைந்தன் தூய ஆவியானவர்க்கும்
மகிமை ஆதியிற்போல
இன்றும் என்றும்
உண்டாகுக ஆமென்.

## உம் சிறகுகள் நிழலில்

உம் சிறகுகள் நிழலில் எந்நாளும் என்னை
அரவணைத்திடு இறைவா
அந்த இருளிலும் ஒளி சுடரும் - வெண்
தணலிலும் மனம் குளிரும் - உந்தன்
கண்களின் இமைபோல் என்நாளும்
என்னை காத்திடு என் இறைவா

1. பாவங்கள் சுமையாய் இருந்தும் உன்
மன்னிப்பில் பனிபோல் கரையும்
கருணையின் மழையில் நனைந்தால் உன்
ஆலயம் புனிதம் அருளும்.


2. வலையினில் விழுகின்ற பறவை - அன்று
இழந்தது அழகிய சிறகை
வான்தன் அருள்மழை பொழிந்தே நீ
வளர்த்திடு அன்பதன் உறவை.

## உன் திருயாழில் என் இறைவா

உன் திருயாழில் என் இறைவா
பல பண் தரும் நரம்புண்டு
என்னையும் ஓர்சிறு நரம்பெனவே
அதில் இணைந்திட வேண்டும் இசையரசே.

1. யாழினை நீயும் மீட்டுகையில் - இந்த
ஏழையின் இதயம் தயில் களையும் (2)
யாழிசை கேட்டு தனை மறந்து - உந்தன்
எழிசையோடு இணைந்திடுமே (2)

2. விண்ணகச் சோலையில்
மலரெனவே திகழ எண்ணில்லாத
தாரகை உனக்குண்டு (2)
உன்னருட் பெரொளி நடுவினிலே - நான்
என் சிறு விளக்கையும் ஏற்றிடுவேன் (2)





# நன்றி நவில்கிறோம்




எமது குடும்பத்தின் குலவிளக்கு
திருமதி. ஞானராணி ரவீந்திரன் (சட்டவல்லுநர்) அவர்களின்
பிரிவு கேட்டு உடன் வந்து உதவிகள் புரிந்தவர்கள்,
தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்தவர்கள், மலர்வளையம்
சாத்தியும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்ட
அனைவருக்கும் நல்லடக்க ஆராதனையில் கலந்து
கொண்டவர்களுக்கும் அவர் நோயுற்றிருந்தவேளை பணி
செய்த அனைவருக்கும் இம்மலருக்குரிய ஆக்கங்கள்
தந்த பெரியோர்களுக்கும், இம்மலரினை அழகுற
அச்சிட்டுத் தந்த சுதன் அச்சகத்தாருக்கும், இன்றைய
ஓராண்டு நிகழ்வில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும்
இன்னும் பல வழிகளில் உதவிய அனைவருக்கும் எமது
நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.


**30, Grfton Road,**
**Harrow,**
**Middle Sex**
**U.K.**

இங்ஙனம்,
**கணவன், தாய்,**
**சகோதரர்கள்.**

# வம்ச விருட்சம்




❖ அமரர்களைக் குறிக்கும்


ශ්‍රී ලංකා නීති විද්‍යාලය
SRI LANKA LAW COL

කොළඹ විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கை
UNIVERSITY OF COLOMBO, SRI LANKA

තැපැල් පෙට්ටිය
தபாற் பெட்டி
Post Box } 1490

කොලේජ් හවුස්
கொலேஜ் ஹவுஸ்
College House

ඔබේ අංකය.
உமது இல.
Your No.

අපේ අංකය.
எமது இல.
Our No. } EX/B/36/1205

කොළඹ
கொழும்பு
Colombo } 3

19th September 1990

Miss S.I.G. Gnanapragasam,
61, Gregory's Road,
Colombo 07.

Dear Madam,

HIRDARAMANI MEMORIAL SCHOLARSHIP

I am glad to inform you that the Senate at its meeting held on 25th August 1990, has approved that you be awarded the Hirdaramani Memorial Scholarship on the results of the Final Examination in Laws Part I held in 1990.

2. The value of the Scholarship shall be Rs.3950/=. This amount will be paid to you in three instalments at the end of each term subject to you producing a certificate of good attendance and satisfactory work from the Dean, Faculty of Law and the Senior Student Counceller.

3. The Scholarship shall be tenable only for one year and cease at the end of the year.

4. In the event of your conduct, attendance or progress being unsatisfactory, the University reserves the right to cancel the award.

Yours faithfully,

(Professor G.L. Peiris)
Vice-Chancellor

Copy to:- Dean/Law,
Head/Law,
SAR/Student Welfare,
Bursar,
Auditor General,
P.F.